செய்தி வெளியீடு எண். 38-2017 நாள்: 21.06.2017

**விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் அரசு இட ஒதுக்கீட்டின்கீழ் 2017 ஆம் ஆண்டுக்கான மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு உளுந்தூர்பேட்டை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் 23.06.2017 முதல் 06.07.2017 வரை நடைபெற உள்ளது.**

******

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் அரசு இட ஒதுக்கீட்டின்கீழ் 2017ஆம் ஆண்டுக்கான மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், உளுந்தூர்பேட்டையில் வருகின்ற 23.06.2017 முதல் 06.07.2017 வரை நடைபெறவுள்ளது. விண்ணப்பதாரர்களின் மதிப்பெண் அடிப்படையிலான தர வரிசையில் கலந்தாய்வு நாள் மற்றும் நேரம் ஒதுக்கீடு செய்யப்பட்டு www.skilltraining.tn.gov.in/iticounsellinglive2017/ என்ற இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் மேற்கண்ட இணையதள முகவரியில் தங்களது விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியினை உள்ளீடு செய்து, தங்களுக்கான கலந்தாய்வு நாள் மற்றும் நேரத்தினை தெரிந்துகொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கலந்தாய்வு தேதியில் விண்ணப்பித்த மாணவர்கள் வரத்தவறினால், கலந்தாய்வு நடைபெறும் மற்ற நாளில் கலந்தாய்விற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். இத்தகைய மாணவர்கள் தங்களது ஆரம்ப தரவரிசைப்படி இடம் தேர்வு செய்ய உரிமை கோர இயலாது.

தவிர்க்க இயலாத காரணத்தினால் கலந்தாய்வுக்கு நேரடியாக வர இயலாத நேர்வில் மாணவர் சார்பாக பெற்றோர் கலந்தாய்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர். இதற்கான ஒப்புதல் கடிதத்தை மாணவரிடமிருந்து பெற்றோர் பெற்றுவர வேண்டும். வருகை தந்துள்ள பெற்றோர் தேர்வு செய்யும் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் தொழிற்பிரிவு இறுதியானது. இதற்கு மாணவர் ஒப்புதல் தந்ததாக கருதப்படும்.

கலந்தாய்வில் கலந்துகொள்பவர்கள் அனைவருக்கும் மதிப்பெண் மற்றும் இனசுழற்சி அடிப்படையில் மட்டுமே சேர்க்கை ஆணை வழங்கப்படும். கலந்தாய்வுக்கு அழைக்கப்பட்டதால் சேர்க்கை ஆணை வழங்க வேண்டும் என்று கோர இயலாது.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.